# கொடைக்கானல் நகராட்சி

## (திண்டுக்கல் மாவட்டம்)

# நிர்வாக அறிக்கை

# 2018–2019

# கொடைக்கானல் நகராட்சி

## 2018–2019 நிர்வாக அறிக்கை

### முன்னுரை :–

கொடைக்கானல் நகரம் சர்வதேச சுற்றுலா தலங்களில் ஒன்றாகும். 16.08.1899–ம் தேதிய 1171–ம் எண் நகராட்சித்துறை அரசாணையின்படி, 1.10.1899 ஆம் தேதி முதல் கொடைக்கானல் நகரம் நகராட்சியாக அமைக்கப்பட்டது. 29.08.1960ம் தேதிய 1438ம் எண் அரசாணையின்படி கொடைக்கானல் நகராட்சி 1.10.1960 லிருந்து இரண்டாம் நிலை நகராட்சி நகரியமாக அமைக்கப்பட்டது. 3.05.1976 ஆம் தேதி ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை எண்.862ன் படி 3.05.1976 முதல், முதல் நிலை நகரியமாக அமைக்கப்பட்டது. 9.05.1983 ஆம் தேதிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை எண்.659ன்படி 9.05.1983 முதல் தேர்வு நிலை நகரியமாக செயல்பட்டு, 16.04.1991ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை எண்.121ன்படி 16.04.1991 முதல் சிறப்பு நிலை நகரியமாக உயர்த்தப்பட்டு செயல்பட்டு வந்தது.

31.05.1994 ஆம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை எண்.(பல்வகை) 143ன்படி சிறப்பு நிலை கொடைக்கானல் நகரியம், சிறப்பு நிலை கொடைக்கானல் நகராட்சியாக மாற்றி அமைக்கப்பட்டு தற்போது செயல்பட்டு வருகிறது.

### 1. அமைப்பும், மேலாண்மையும் :–

#### 1–1 அமைப்பு:

தமிழகத்தின் தலை நகரிலிருந்து 540 கிலோ மீட்டர் தொலைவிலும், கடல் மட்டத்திலிருந்து 2010 மீட்டர் உயரத்திலும் அமையப் பெற்றுள்ளது. இந்நகராட்சியின் பரப்பளவு சென்ற ஆண்டில் இருந்தது போலவே பெருக்கமின்றி 21.45 சதுர கிலோ மீட்டர் கொண்டதாக இருந்து வருகிறது. இந்நகராட்சி எல்லைகளில் எவ்வித மாறுதலும் இல்லை. வில்பட்டி கிராமத்தில் சில பகுதிகளும், வெள்ளகவி கிராமத்தில் நில அளவு எண்கள் 315, 316, 324/1 உள்ள பகுதிகளும் நில அளவு எண்கள் 139ல் இருந்து 142 வரையிலும் கொடைக்கானல் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் நிலங்களில் நில அளவு எண்கள் 1/1 முதல் 1/21 வரையுள்ள பகுதிகளும் கொடைக்கானல் நகர நில அளவு எண்கள் 185, 268, 402எ, 401பி, 400, 178, 186, 187ல் உள்ள பகுதிகளில் அடங்கியுள்ள நிலங்களையும் கொண்ட நிலப்பரப்பு இந்நகராட்சி எல்லைக்குள் அடங்கியுள்ளது.

#### 1.2 ஆட்சி வரம்பு:

| | | |
|---|---|---|
| வடக்கு | : | வில்பட்டி கிராம எல்கை வரை. |
| கிழக்கு | : | அடுக்கம் கிராம எல்கை வரை. |
| தெற்கு | : | வெள்ளகவி கிராமம் எல்கை மற்றும் வனச் சரக பகுதி. |
| மேற்கு | : | பூம்பாறை வனசரக பகுதி வரை. |

### 1.3 மக்கள் தொகை

2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 36463 ஆக கணக்கிடப்பட்டுள்ளது. மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இந்நகராட்சியின் மக்கள் தொகை வளர்ச்சி கீழ்க்கண்டவாறு இருந்துள்ளது.

| ஆண்டு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1901 | 1051 | 861 | 1912 |
| 1911 | 1650 | 1256 | 2906 |
| 1921 | 2268 | 2028 | 4296 |
| 1931 | 3533 | 2990 | 6523 |
| 1941 | 4929 | 4795 | 9724 |
| 1951 | 5717 | 5224 | 10941 |
| 1961 | 6672 | 6188 | 12860 |
| 1971 | 8440 | 8041 | 16481 |
| 1981 | 10511 | 9940 | 20451 |
| 1991 | 14507 | 12916 | 27423 |
| 2001 | 16805 | 16164 | 32969 |
| 2011 | 18201 | 18262 | 36463 |

## 2. நகராட்சி நிர்வாகம்

### 2.1 நகர் மன்றத் தலைவர்:

இந்நகரின் நகர் மன்ற தலைவர் பதவி 1996 முதல் பொதுவான ஒதுக்கீடு செய்யப்பட்டதாகும். 2011ம் ஆண்டு நடை பெற்ற உள்ளாட்சி தேர்தலில்திரு. வி.எஸ்.கோவிந்தன் என்பவர் நகர்மன்றத் தலைவர் தேர்தலில் போட்டியிட்டு மக்களால் தேர்வு செய்யப்பட்டு பதவி வகித்து வந்தார். பின்னர் 24.05.2013 அன்று நகர்மன்றத் தலைவர் பதவியை ராஜினாமா செய்துவிட்டார். அதனைத் தொடர்ந்து நகர்மன்ற துணைத் தலைவர் திரு.தா.எட்வர்ட் 25.05.2013 முதல் 24.09.2014 வரை நகர்மன்றத் தலைவர் பொறுப்பு வகித்தார். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற நகர்மன்றத் தலைவர் பதவிக்கான தற்செயல் தேர்தலில் திரு. மா. ஸ்ரீதர் என்பவர் நகர்மன்றத் தலைவராக தேர்வு செய்யப்பட்டு 25.09.2014 முதல் பொறுப்பேற்று 24.10.2016 வரை பதவி வகித்தார்.

### 2.2 தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்:

அரசாணை எண்.146, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் (தேர்தல்) வழங்கல் துறை, நாள்.24.10.2016ம் தேதிய உத்தரவில் நகராட்சி ஆணையர்களை தனி அலுவலர்களாக நியமனம் செய்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி 25.10.2016 முதல் ஆணையாளர் திரு.க.சரவணன் கொடைக்கானல் நகராட்சி தனி அலுவலராக பொறுப்பேற்று தனி அலுவலர் மற்றும் ஆணையாளராக பதவி வகித்தார். 01.04.2018 முதல் 31.03.2019 வரை திரு.ரா.முருகேசன், தனி அலுவலர் மற்றும் ஆணையாளராக பதவி வகித்தார்.

## 3. தேர்தல்கள்

அரசாணை எண். 135 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 11.6.1996–ன் படியும், 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படியும் இந்நகராட்சியில் 24 வார்டுகள் பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | ஒதுக்கீட்டின் விபரம் | வார்டுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பெண்களுக்கு பொதுவானது ( 11 முதல் 13, 17, 22,23,24 ) | 7 |
| 2 | தாழ்த்தப்பட்ட பெண்களுக்கு. (9) | 1 |
| 3 | தாழ்த்தப்பட்டவர்களுக்கு (பொது) 10 மற்றும் 14) | 2 |
| 4 | பொதுவானவை ( 1 முதல் 8, 15,16,18 முதல் 21 வார்டு) | 14 |
| | **மொத்தம்** | 24 |

## 4. தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட நகர் மன்ற கூட்டங்கள் மற்றும் குழுக் கூட்டங்கள்:–

அறிக்கையாண்டில் கீழ்க்கண்டவாறு கூட்டங்கள் கூட்டப்பட்டு பொருள்கள் முடிவு செய்யப்பட்டது.

| 01.04.2018 முதல் 31.03.2019 | கூட்ட எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருள் |
|---|---|---|
| | | |
| சிறப்புக் கூட்டம் | 0 | 0 |
| அவசரக் கூட்டம் | 6 | 105 |
| சாதாரணக் கூட்டம் | 11 | 165 |
| **மொத்தம்** | 17 | 270 |

| குழுக் கூட்டம் 01.04.2018 முதல் 31.03.2019 | கூட்ட எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருள் |
|---|---|---|
| | –– | –– |
| 1. ஒப்பந்தக் குழு கூட்டம் | – | – |
| 2. வரி மேல் முறையீட்டு குழுக் கூட்டம். | – | – |
| 3. உள்ளூர் திட்டக் குழுமம். | 6 | 69 |
| 4. நியமனக் குழுக் கூட்டம் | 1 | 2 |

## 5. நிர்வாக செயல்பாடுகள் :–

### 5.1 ஆணையாளர் :

| வ. எண். | பெயர் | காலம் |
|---|---|---|
| 1 | திரு.ரா.முருகேசன், எம்.ஏ., எம்.பில்., பி.எல்., டி.பி.எம்., ஆணையாளர். | 01.04.2018முதல் 31.03.2019வரை. |

### 5.2 நகர் நல அலுவலர்:

| வ. எண். | பெயர் | காலம் |
|---|---|---|
| 1 | டாக்டர். எஸ். ராம்குமார், எம்பிபிஎஸ்., ப்பி.எச்.டி. | 01.04.2018 முதல் 31.03.2019வரை. பணியேற்பாட்டின் அடிப்படையில் ஒசூர் நகராட்சி |

**5.3 நகராட்சிப் பொறியாளர் :-**

| வ. எண். | பெயர் | காலம் |
|---|---|---|
| 1 | திரு.சேகர், இளநிலை பொறியாளர் (கூ.பொ பா) | 01.04.2018 முதல் 15.06.2018வரை. |
| | திரு.எஸ்.சண்முகம்,<br>நகராட்சி பொறியாளர்,(கூ.பொ), பழனி நகராட்சி. | 16.06.2018 முதல் 31.12.2018வரை. |
| | திரு.எஸ்.முகமது சாகுல் ஹமீது,<br>நகராட்சி பொறியாளர். | 02.01.2019 முதல் 28.02.2019 வரை. |
| 1 | திரு.எஸ்.சண்முகம்,<br>நகராட்சி பொறியாளர்(கூ.பொ),<br>பழனி நகராட்சி. | 01.03.2019 31.03.2019 வரை |

**5.4 நகரமைப்பு அலுவலர் :–**

| வ. எண். | பெயர் | காலம் |
|---|---|---|
| 1 | திரு.ப.முருகானந்தம்., பி.இ.,எம்.பி.ஏ.,<br>நகரமைப்பு அலுவலர். | 01.04.2018முதல் 31.03.2019வரை. |

**5.5 மேலாளர்:–**

| வ. எண். | பெயர் | காலம் |
|---|---|---|
| 1 | திரு.சு.மூர்த்தி,<br>மேலாளர். | 01.04.2018 முதல் 31.08.2018முடிய |
| 2 | திரு.ப.பிச்சைமணி, கணக்கர். (கூ.பொ). | 01.09.2018 முதல் 08.03.2019முடிய |
| | திரு.பா.குமார்சிங், மேலாளர். | 09.03.2019 முதல் 31.03.2019முடிய |

**5.6 கணக்கர் :–**

| வ. எண். | பெயர் | காலம் |
|---|---|---|
| 1 | திரு.ப.பிச்சைமணி, கணக்கர். | 01.04.2018 முதல் 31.03.2019வரை. |

**5.7 உதவி திட்ட அமைப்பாளர் :**

| வ. எண். | பெயர் | காலம் |
|---|---|---|
| 1 | திரு. எம். கே. வேல்முருகன். | 01.04.2018 முதல் 31.03.2019வரை. |

**5.8 அலுவலகக் கட்டிடம் :–**

நகராட்சி அலுவலகம் நகரின் மையப் பகுதியில் இயற்கை எழில் ததும்பும் ஏரிக்கு அருகில் அமைந்துள்ளது. நகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்திலேயே தொடர்ந்து இயங்கி வந்தது. இக்கட்டிடத்தினை புதுப்பிக்கும் பொருட்டு தற்காலிகமாக கட்டுமானப் பணிகள் முடிவுறும் வரை நகராட்சிக்கு சொந்தமான மூஞ்சிக்கல் பகுதியில் ஆனந்தகிரி துவக்கப்பள்ளி கட்டிட வளாகத்தில் நகராட்சி அலுவலக பணிகள் நடைபெற்று வந்தது. கட்டிடம் புதுப்பிக்கும் பணி முடிவுற்று 26.06.2014 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு 26.06.2014 முதல் புதிய அலுவலகத்தில் பணிகள் நடைபெற்று வருகிறது.

**6. வழக்குகள் (அனைத்து பிரிவு) :–**

அறிக்கையாண்டின் இறுதியில் மொத்தம் 108 வழக்குகள் இருந்தன. நகர் மன்றத் தீர்மானம் எண். 320 நாள். 22–9–1998 ன்படி (1.4.2010 முதல் 31.3.2011 வரை) திரு. எம்.தனபாலகன், பி.ஏ.,பி.எல்., நகராட்சி நிலை வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு தொடர்ந்து அறிக்கையாண்டு முழுவதும் வழக்குகளை நடத்தி வந்தார். சென்னை உயர்நீதி மன்ற வழக்குகளை உயர் நீதி மன்ற முதுநிலை வழக்கறிஞர் திரு. ப்பி. ஸ்ரீனிவாஸ், பி.ஏ.,பி.எல்., நடத்தி வருகின்றனர். மதுரை உயர்நீதி மன்றக் கிளை வழக்குகளை திரு. ப்பி. ஸ்ரீனிவாஸ் , திரு.டி.எஸ்.முகமது முகைதீன் ஆகியோர் நடத்தி வருகின்றனர். நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் நிலை வழக்கறிஞராக திரு.கே. தினேஷ்பாபு அவர்களை நியமிக்கப்பட்டு 2013ம் ஆண்டிற்குப் பின்னர் சென்னை உயர்நீதி மன்றம் மதுரைக் கிளை நீதிப்பேராணை வழக்குகள் அனைத்தும் அன்னாரால் நடத்தப்பட்டு வருகிறது.

**அறிக்கையாண்டில் வழக்குகள் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.**

| | | |
|---|---|---|
| 1 | அறிக்கையாண்டின் வழக்குகள் | 145 |
| 2 | அறிக்கையாண்டில் முடிவு பெற்ற வழக்குகள் எண்ணிக்கை | 31 |
| 3 | அறிக்கையாண்டில் இறுதியில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை | 114 |

**7. தணிக்கைத் தடைகள்**

அறிக்கையாண்டில் தணிக்கைத் தடைகள் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | 01.04.2018 அன்று நிலுவை | 262 |
| 2 | அறிக்கையாண்டில் எழுப்பப்பட்டுள்ள தணிக்கைத் தடைகள் | 0 |
| 3 | அறிக்கையாண்டில் நிவர்த்தி செய்யப்பட்டத் தடைகள். | 112 |
| 4 | நிலுவை | 150 |

**8. அச்சடித்தல் மற்றும் படிவங்கள் :–**

இத் தலைப்பின் கீழ் ரூ. 30,69,976/– அறிக்கையாண்டில் செலவிடப்பட்டது. சென்ற ஆண்டு செலவினம் ரூ.5,64,442/– ஆகும். நகராட்சியில் நகல் எடுக்கும் இயந்திரம் ஒன்று, 1 கலர் பிரிண்டருடன் கூடிய நகல் எடுக்கும் இயந்திரம் ஒன்று, நகல் எடுக்கும் இயந்திரத்துடன் கூடிய Fax இயந்திரம் மற்றும் 17 கணிப் பொறிகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**9. <u>பொறியியல் பிரிவு</u> :–**

அறிக்கையாண்டில் திரு.எஸ்.முகமது சாகுல் ஹமீது.பி.இ.,பொறியாளர் 01.04.2016 முதல் 31.03.2017 முடிய நகராட்சி பொறியாளராக பணிபுரிந்து வருகிறார். அறிக்கை ஆண்டில் பொறியியல் பிரிவில் அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள்.

| வ. எண். | பதவி | எண்ணிக்கை | |
|---|---|---|---|
| 1 | பொறியாளர் | 1 | |
| 2 | இளநிலை பொறியாளர் | 1 | |
| 3 | பணி ஆய்வாளர் | 2 | |
| 4 | மின்பணியாளர் நிலை 2 | 1 | காலியிடம் (1) |
| 5 | தச்சர் | 1 | காலியிடம் (1) |
| 6 | ஓட்டுநர் | 1 | காலியிடம் (1) |
| 7 | சாலைப் பணியாளர் | 28 | காலியிடம் (7) |

**<u>சாலைகள், பாலங்கள் மற்றும் கட்டிடங்கள்</u> :**

**<u>10. (1) சாலைகள்:</u>**

அறிக்கையாண்டு முடிவில் கீழ்க்கண்டவாறு சாலைகள் நகராட்சியின் பராமரிப்பில் உள்ளன.

| வ. எண் | சாலைகள் | கி.மீ |
|---|---|---|
| 1 | சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் | 15.09 |
| 2 | தார் தளச் சாலைகள் | 46.41 |
| 3 | கருங்கல் சாலைகள் | 5.00 |
| | மொத்தம் | 66.50 |

மேற்கண்ட சாலைகள் முன்னுரிமை அடிப்படையில் அரசு நிதி, சுங்க நிதி மற்றும் நகராட்சியின் பொது நிதியின் கீழ் பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி பணிகள் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்படுகின்றன.

**10 (2) சுங்க நிதி 2018–2019**

கொடைக்கானல் நகராட்சியில், சுஙக நிதி 2018–2019 ன் கீழ் பணிகள் மேற்கொள்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 2634/2018/ஊ.வ.8 நாள். 24.09.2018 ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு கீழ்க்கண்ட இரண்டு பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுவிட்டது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | சுஙக சாவடியில் பூம் பேரியர் சி.சி.டி.வி பொருத்துதல் மற்றும் கணணி மையமாக்குதல் | 24.00 |
| 2 | சுஙகச் சாவடியில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல் | 8.10 |

மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் 11.01.2019 ம் தேதிய நேரடி அறிவுரையில், கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான வெள்ளி நீர் வீழ்ச்சி பகுதியில் உள்ள பூஙகாவினை அழகுப்படுத்தி புதுப்பித்து பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வர தெரிவித்துள்ளார். அதன்படி கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கு திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்.980/2019/ஊ.வ.7 நாள். 08.02.2019 ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு கீழ்க்கண்ட இரண்டு பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுவிட்டது.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | சுஙக நிதி 2018–2019 | வெள்ளி நீர் வீழ்ச்சி வடியும் தடாகப் பகுதியை ஒட்டியுள்ள சாலையோர தடுப்புச் சுவர்களைப் பலப்படுத்தி சீரமைத்தல் | 10.00 |
| 2 | சுற்றுலா வளர்ச்சி, சேமிப்பு நிதி | வெள்ளி நீழ் வீழ்ச்சி இருபுறமும் S.S கிரில் பொருத்தி பூஙகா அமைக்கும் பணி | 10.00 |

கொடைக்கானல் நகராட்சி பகுதியில் கீழ்க்குண்டாறு குடிநீர் பணிகளுக்கு குழாய் பதித்திட பெரும்பாலான சாலைகள் தோண்டப்பட்டு அவைகள் சரி செய்யப்படாமல் போக்குவரத்திற்கு இடையூறாகவும், பழுதடைந்தும் உள்ளது. இச்சாலைகளை சீரமைப்பதற்கு கீழ்க்கண்ட பணிகள் தேர்வு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண். 2634/2018/ஊ.வ.8 நாள். 13.8.2018ன்படி நிர்வாக அனுமதி வழஙகப்பட்டு கீழ்க்கண்ட மூன்று பணிகளும் முழுமையாக முடிக்கப்பட்டுவிட்டது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | முதலியார்புரம் 1 மற்றும் 2 வது தெரு, ஆனந்தகிரி 2 மற்றும் 3 வது தெருவில் தார்ச்சாலை பேட்ஜ் ஒர்க் செய்தல் | 26.00 |
| 2 | முதலியார்புரம் 3 மற்றும் 4–வது தெரு ஆனந்தகிரி 1 மற்றும் 2–வது தெருவில் சிமிண்ட் சாலை பேட்ஜ் ஒர்க் செய்தல் | 33.75 |
| 3 | நாயுடுபுரம் பிள்ளையார் கோவில் முதல் நகராட்சி எல்லை வரை தார்ச்சாலை அமைத்தல் | 11.25 |

## 11. திறந்த வெளியில் மலம் கழிப்பதை தடை செய்திடல் 2014–2015.

திறந்த வெளியில் மலம் கழிப்பதை தடை செய்திட 2013–2014 ம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டஙகளின் கீழ் கொடைக்கானல் நகராட்சிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.13808/2013/பி1 நாள். 8.08.2013 ல் தெரிவிக்கப்பட்டு கடிதம் பெறப்பட்டது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஒதுக்கீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | Infra Gap Filling Fund 2013-2014 | 15.00 |
| 2 | IUDM 2013-2014 | 15.00 |
| 3 | State Fund 2013-2014 | 30.00 |
| | மொத்தம் | 60.00 |

அதன்படி, கீழ்க்கண்ட இடஙகளில் பொது கழிப்பறைகள் ( Universal Toilet ) அமைத்திட 19.09.2013 ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்ட பணிகளில் வரிசை எண்.1ல் உள்ள பணி முடிவுற்று மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பீடு ரூபாய் இலட்சத்தில் | மானியம் ஒதுக்கீடு ரூபாய் இலட்சத்தில் | கூடுதல் தொகை ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|
| 1 | State Fund 2013–14 | பழைய பேருந்து நிலையத்தில் ஆண் கழிப்பறை அமைத்தல்(1+5) 15.00 | 17.50 | 30.00 | 5.00 |
| | | பழைய பேருந்து நிலையத்தில் பெண் | 17.50 | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | கழிப்பறை அமைத்தல் ( 1+5) | | | |
| 2 | Infra Gap Filling Fund 2013–14 | பெண்டர் லாக் சாலையில் ஆண் கழிப்பறை அமைத்தல் (1+2) | 12.50 | 15.00 | 10.00 |
| | | பெண்டர் லாக் சாலையில் பெண் கழிப்பறை அமைத்தல் (1+2) | 12.50 | | |
| 3 | IUDM 2013–14 | சில்வர் கேஸ்கட் அருகில் ஆண், பெண் கழிப்பறை அமைத்தல் ( 1+2) | 12.50 | 15.00 | 10.00 |
| | | சில்வர் கேஸ்கட் அருகில் ஆண், பெண் கழிப்பறை அமைத்தல் ( 1+2) | 12.50 | | |
| | மொத்தம் | | 85.00 | 60.00 | 25.00 |

## 12. சுங்க நிதி 2014–2015

கொடைக்கானல் நகராட்சியில் சுங்க நிதி 2015–2016 ன் கீழ் பணிகள் மேற்கொள்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 3739/2015/ஊ.வ.8 நாள். 30.09.2015 ல் நிர்வாக அனுமதி ரூ. 70.00 இலட்சத்திற்கு பெறப்பட்டு 12.12.2014ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டது.

| வ. எண் | எடுத்துக் கொள்ளப்பட்ட பணியின் விபரம் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | நாயுடுபுரம் பச்சை மரத்து ஓடை பகுதியில் தடுப்பணை அமைத்தல். | 1 | 10.00 |
| 2 | பியர்சோழா பகுதியில் தாங்கு சுவர் அமைத்தல். | 1 | 10.00 |
| 3 | போஸ்ட் ஆபிஸ் சாலையில் தார்ச்சாலை அமைத்தல். | 1 | 10.00 |
| 4 | புரூட்டன் காம்பவுண்டு வாகன நிறுத்தம் அருகில் வாகன நிறுத்தத்தினை விரிவாக்கம் செய்தல் | 1 | 10.00 |
| 5 | ஏரி நீர் வெளியேறும் இடத்தில் தடுப்பு சுவர் அமைத்தல். | 1 | 5.00 |
| | மொத்தம். | 5 | 45.00 |

கொடைக்கானல் நகராட்சியில் சுங்கநிதி 2015–16ன் கீழ் பணிகள் மேற்கொள்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் செயல்முறை ந.க.எண்.8913/2015/ஊ.வ.8, நாள்.04.01.2016–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 10.02.2016ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

| வ. எண் | எடுத்துக் கொள்ளப்பட்ட பணியின் விபரம் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | பாக்கியபுரம் மேல் பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல். | 1 | 4.98 |
| 2 | பர்ன்ஹில் ரோடு விநாயகர் கோவில் பகுதியில் சிமெண்ட் சாலை மற்றும் டிப்போ எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் மழைநீர் வாய்க்கால் மூடி அமைத்தல். | 1 | 4.95 |
| 3 | எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் சிறு பாலம் மற்றும் குறிஞ்சி ஆண்டவர் கோவில் பகுதியில் பேவர் பிளாக் பதித்தல், செட்டியார் பார்க் மற்றும் நேதாஜி நகர் பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல். | 1 | 9.92 |
| 4 | சீனிவாசபுரம் முதல் கார்மேல்புரம் வரை சிமெண்ட் சாலை அமைத்தல். | 1 | 4.98 |
| 5 | அண்ணாநகர் பகுதியில் தடுப்புச் சுவர் மற்றும் மழை நீர் வாய்க்கால் அமைத்தல், அண்ணா நகர் 3வது தெருவில் பேவர் பிளாக் தளம் அமைத்தல். | 1 | 9.94 |
| 6 | பெய்ரி பால்ஸ் ரோட்டில் சிமெண்ட் சாலை மற்றும் சிறு பாலம் அமைத்தல், மேல் புதுக்காட்டி சிமெண்ட் சாலை அமைத்தல். | 1 | 9.94 |
| 7 | செல்லபுரம் பகுதியில் தடுப்புச் சுவர் அமைத்தல். | 1 | 4.98 |
| 8 | கால்ப் கிளப் சந்திப்பு முதல் மைக்ரோ ஸ்டேசன் வரை தார் சாலை அமைத்தல், பாம்பார்புரம் பகுதியில் தடுப்புச் சுவர் மற்றும் சிறு பாலம் | 1 | 9.92 |

| | | | |
|---|---|---|---|
| | அமைத்தல். | | |
| 9 | பிளிஸ்வில்லா தெருவில் செல்வி வீடு முதல் பாலு வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல். | 1 | 4.99 |
| 10 | இருதய ஆண்டவர் கோயில் செல்லும் சாலையில் தடுப்புச் சுவர் அமைத்தல். | 1 | 6.62 |
| 11 | பிரையண்ட் பார்க் அண்ணா சிலைக்கு அலங்கார கம்பி வேலி அமைத்தல். | 1 | 9.98 |
| 12 | வார்டு எண்.23ல் உகார்தே நகர் பகுதியில் சிமிண்ட் சாலை மற்றும் தாங்கு சுவர் அமைத்தல். | 1 | 9.90 |
| | மொத்தம். | 12 | 91.10 |

## 13. ஒருங்கிணைந்த நகர்ப்புற உள் கட்டமைப்பு வளர்ச்சித் திட்டம் 2013–2014 (IUDM 2013–14)

கொடைக்கானல் நகராட்சிக்கு ஒருங்கிணைந்த நகர்ப்புற உள்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டம் 2013–2014 (IUDM 2013–2014) ன் கீழ் நகர் பகுதியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்திட அரசாணை நிலை எண். 492 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 19–09–2013 ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

(ரூபாய் இலட்சத்தில் )

| திட்டத்தின் பெயர் | மதிப்பீடு | IUDM பங்குத் தொகை 50% | IUDM பங்குத் தொகை 2013–14 | நகராட்சி பங்குத் தொகை 50% | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| நகர் பகுதியில் பாதாளச் சாக்கடை திட்டம் செயல்படுத்துதல் | 14000 | 7000.00 | 1050.00 | 7000.00 | 14000.00 |

அதன்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் பேரில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க செண்பகனூர் பகுதியில் உள்ள 1.00 ஏக்கர் இடம் தேர்வு செய்யப்பட்டு நவீன தொழில்நுட்பத்துடன் அமைக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் தெரிவிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

## 14. ஒருங்கிணைந்த நகர்ப்புற உள் கட்டமைப்பு வளர்ச்சித் திட்டம் 2013–2014 (IUDM 2013-14)

கொடைக்கானல் நகராட்சி பகுதியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2013–2014 ( IUDM 2013–2014) ன் கீழ் நகர் பகுதியில் **மின் சேமிப்பு மின் விளக்குகள் மற்றும் அலங்கார மின் கம்பங்கள் அமைக்கும்** பணியினை மேற்கொள்ள அரசாணை நிலை எண். 580 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 21.11.2013 ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. அதன்படி, இப்பணியினை மேற்கொள்ள தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 1206/2014/னுடீ2 நாள். 4.02.2014 ன்படி தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு 18.03.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு 23.07.2014ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் முடிவுற்றுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | | மதிப்பீடு இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 2 | | 3 |
| 1 | கொடைக்கானல் நகராட்சி பகுதியில் அலங்கார மின் கம்பங்களுடன் கூடிய அலங்கார மின் சேமிப்பு மின் விளக்குகள் அமைத்தல் | | 1289.85 |
| **S. No.** | **Roads** | **Luminaire Description** | **Quantity** |
| 1 | Observatory Road | Teceo/24 LED /41 W/500 mA | 124 |
| 2 | Fairy Falls Road | Brika/16 LED/27 W/500 mA | 99 |
| 3 | Golf Link Road | Brika/16 LED/27 W/500 mA | 164 |
| 4 | Upper Lake Road | Brika/16 LED/27 W/500 mA | 63 |
| 5 | Pambapuram to Seven Road | Brika/16 LED/27 W/500 mA | 191 |
| 6 | Seven Road to Municipality Office-Laws Ghat Road | Teceo/48LED/78 W/500 mA | 21 |
| 7 | Lake Road-Around the Lake | Thylia/60 W Double headed | 230 |
| 8 | Kurinji Andavar Koil Road. | Teceo/48LED/78 W/500 mA | 136 |
| 9 | Chettiyar Road-( From Chettiyar Park to Govt High School) | Brika/16 LED/27 W/500 mA | 100 |

| | | | |
|---|---|---|---|
| 10 | Govt High School to Toll Road End-Via Senbaganur bus Stop ( Up to Municipality Limit ) | Teceo/24 LED /41 W/500 mA | 216 |
| 11 | Govt High School to Municipal Office – (Laws Ghat Road Extension) | Teceo/24 LED /41 W/500 mA | 62 |
| 12 | Seven Road to Moonjikal- Annasalai | Teceo/48LED/78 W/500 mA | 35 |
| 13 | Fern Hills Road | Brika/16 LED/27 W/500 mA | 115 |
| 14 | Bear Shola Falls Road | Brika/16 LED/27 W/500 mA | 129 |
| 15 | Municipality Bridge | Belgica/32 LED/53 W/500 mA | 10 |
| 16 | Coakers walk | Brika/16 LED/27 W/500 mA | 69 |
| 17 | Anandagiri Area | | 43 |
| | | Total | 1 807 |

தெருவிளக்குகளை கீழ்கண்ட பணியாளர்களைக் கொண்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

மின் கம்பியாளர் = 2

மின் பணியாளர் = 1

மின்கம்பி உதவியாளர் = 2 (காலியிடம்)

## 15.ஒருங்கிணைந்த குடியிருப்புகள் மற்றும் குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் 2008–2009

கொடைக்கானல் நகராட்சிக்கு ஒருங்கிணைந்த குடியிருப்பு மற்றும் குடிசை பகுதி மேம்பாட்டுத் திட்டம் பகுதி இரண்டு (IHSDP Phase - II)ன் கீழ் 8 குடிசைப் பகுதிகள் தேர்வு செய்யப்பட்டு இப்பகுதிகளில் 900 குடிசை வீடுகளை கான்கிரீட் வீடுகளாக மாற்றியமைக்கவும், குடிசைப் பகுதிகளில் சாலை வசதி, குடிநீர் வசதி மற்றும் தெருவிளக்குகள் அமைக்கவும் ரூ. 1888.60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 900 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு குடிசை வீடுகளை கான்கிரீட் வீடுகளாக மாற்றம் செய்ய பயனாளிகளுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு 850 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

## 16. பொது நிதி

2018–2019 ஆம் ஆண்டிற்கு நகராட்சி பொது நிதியில் தார்ச் சாலை, சிமென்ட் சாலைகள், பணியாளர்களின் குடியிருப்பு மராமத்து, மழைநீர் வடிகால், தடுப்புச் சுவர்கள் அமைத்தல் போன்ற வேலைகள் செய்வதற்கு ரூ. 1160.00 லட்சத்தில் மதிப்பீடுகள் தயார் செய்து வேலைகள் செய்து முடிக்கப்பட்டது.

## 17. குடிநீர் அபிவிருத்தி திட்டம் UIDSSMT 2013-14

இந்நகருக்கு கூடுதல் குடிநீர் கிடைக்க கீழ்குண்டாறு குடிநீர் திட்டம் மத்திய மாநில அரசின் நிதி உதவியுடன் ரூ. 4631.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள 18.12.2014ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு மேற்படி திட்டத்தினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்த அரசு ஆணை எண். 514 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 18.12.2014ல் அனுமதிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி 26.02.2016ல்கோரப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

## 18. தூய்மை இந்தியா திட்டம் 2015–16.

இத்திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மைக்கு கீழ்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் ந. க. எண். 38984/2014/பி1, நாள் 05.11.2015ல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 10.02.2016ல் 7 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டது. அதில் 6 பணிகள் முடிக்கப்பட்டுவிட்டது ஒரு பணி நடைபெற்று வருகிறது.

| | | |
|---|---|---|
| திடக்கழிவு மேலாண்மை நிதி | 55% | 167.75 |
| நகராட்சி நிதி | 25% | 76.25 |
| தூய்மை இந்தியா நிதி | 20% | 61.00 |
| | மொத்தம் | 305.00 |

| I | இரண்டாம் நிலை சேகரிப்பு | தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | ஆட்டோ டிப்பர் (3 டன் கொள்ளவு) வாகனம் 4 எண்ணம் வாங்குதல். | 32.00 |

| II | உட்கட்டமைப்பு மற்றும் முறைப்படுத்துதல். | தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 2. | கழிவுகளை சேகரிக்கும் சிமெண்ட் தளம் (மேற்கூரையின்றி) | 25.00 |
| 3. | கழிவுகள் சேகரிக்கும் சிமெண்ட் தளம் (மேற்கூரையுடன்) | 42.00 |
| 4. | சுற்று சுவர் கட்டுதல். | 18.75 |
| 5. | குப்பையை பிரித்தெடுக்கும் மின் உபகரணம் | 110.00 |
| 6. | மின் உபகரணம் அமைக்கும் அறை கட்டுதல் | 70.00 |
| 7. | IEC தகவல் தொடர்பு வசதிகள் செய்தல் | 7.25 |
| | மொத்தம் | 305.00 |

## 19. ஓய்வு விடுதிகள்:

இந்நகராட்சியின் ஓய்வு விடுதி ஒன்று கவி தியாகராசர் சாலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி ஓய்வு விடுதியின் ஒரு பகுதி 16 அறைகள் கொண்டதாக உள்ளது. மேற்படி அறைகள் ஆண்டுதோறும் பொது ஏலத்தின் மூலம் குத்தகைக்கு விடப்பட்டு வருகிறது. 2018–19ஆம் அண்டில் குத்தகைக்கு எவரும் ஏலம் கோரவில்லை.

தங்கும் விடுதியின் மற்றொரு பகுதி 8 அறைகளை கொண்டதாகும். இவ்வறைகள் 13.02.2014 அன்று பொது ஏலத்தில் விடப்பட்டது. மேற்படி மேற்படி தங்கும் விடுதியின் வாயிலாக அறிக்கையாண்டில் வரப்பெற்ற வருவாய் 244259/– ஆகும். கடந்த ஆண்டு வருவாய் ரூ.232628/– ஆக இருந்தது

## 20. தெரு விளக்குகள்.

| வ. எண் | விளக்குகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | T5 4 x 24 CFL 96w | 250 |
| 2 | T5 1 x 36 CFL 36w | 126 |
| 3 | 40 w Tube | 647 |
| 4 | T5 1 x 24 CFL | 177 |
| 5 | T5 2 x 24 CFL 48 w | 254 |
| 6 | T5 2 x 36 w | 28 |
| 7 | 250 w Sodium | 46 |
| 8 | உயர் மின் கோபுரம் விளக்கு | 10 |
| | மொத்தம் | 1538 |

தெருவிளக்குகளை பராமரிக்க போதிய பணியாளர்கள் இல்லாததால் நகர்மன்ற தீர்மானம் எண்.1605, நாள்.24.06.2016ல் அனுமதி பெறப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.13899/2016/D.O.1, நாள்.21.07.2016ல் ஒப்புதல் பெறப்பட்டு 10.08.2016ல் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/S.மாருதி டிரேடர்ஸ் கார்ப்பரேசன் தேனி மூலம் மேற்கொள்ள மன்ற தீர்மானம் எண்.1641, நாள்.29.08.2016ல் ஒப்புதல் பெறப்பட்டு 01.09.2016 முதல் தனியார் நிறுவனம் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**21. கட்டிடங்கள்:**

நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்கள் யாவும் நல்ல முறையில் நகராட்சி நிதி நிலைக்கேற்ப பராமரிக்கப்பட்டு வந்தது. தேவையான பழுது பார்த்தல் வேலைகளும் அவ்வப்போது செய்யப்பட்டு வருகிறது.

**22. கிடங்கு கருவிகளும், தளவாடங்களும்**

அலுவலக உபயோகத்திற்காகவும் மற்றும் நகராட்சியின் பிற நிலையங்களின் உபயோகத்திற்காகவும், பயன்படுத்தப்படும் கருவிகளுக்கு அறிக்கையாண்டில் செலவினம் ஏதும் இல்லை.

1. பொதுப் பணி வேலைகளுக்காக தனியாக லாரி இந்நகராட்சியால் பராமரிக்கப்படவில்லை.
2. குடிநீர் விநியோகத்திற்கான டேங்கர் லாரி ஒன்று பராமரிக்கப்பட்டு வருகிறது. (2.00 இலட்சம் )

**23. பொது நூலகங்கள்.**

இந்நகராட்சியால் நூலகங்கள் எதும் நடத்தப்படவில்லை. கவி தியாகராசர் சாலையில் மாவட்ட நூலக ஆணைக் குழுவால் பொது நூலகம் ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. இந்நகராட்சியால் சொத்துவரியுடன் சேர்த்து வசூலிக்கப்படும் நூலக வரித் தொகையாக அறிக்கையாண்டில் ரூ. 29,83,951/– மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கு செலுத்தப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு செலுத்தப்பட்ட நூலக வரித் தொகை ரூ. 22,25,010/– ஆகும்.

**24. பூங்காக்கள்:**

1. கொடைக்கானல் நகராட்சியில் K.R.R கலையரங்கம் அருகில் நகராட்சி மூலம் புதிய சிறுவர் பூங்கா ரூ. 20.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டுவருகிறது. இப்பூங்காவில் கட்டணம் வசூலிக்கம் உரிமையை துறை மூலம் வசூலிக்கப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் வரவு ரூ.123426/– கடந்த ஆண்டு குத்தகைக்கு விடப்பட்டதன் மூலம் வருவாய் ரூ.4,10,100/– ஆக இருந்தது. மத்திய சுற்றுலா வளர்ச்சி நிதியின் கீழ் வி.ஜி.பி. லே அவுட் பகுதியில் எகோ பூங்கா அமைக்கும் பணி முடிவுற்றுள்ளது.
2. அரசு வேளாண்மைத் துறை மூலம் பிரையன்ட் பூங்கா பராமரிப்பு செய்யப்பட்டுவருகிறது.
3. படகு குழாம் கொடைக்கானல் நகராட்சியின் மூலம் ரூ. 20.00 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டு தொடர்ந்து நகராட்சியால் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. படகு சவாரிக்கான கட்டணம் நகராட்சியால் வசூலிக்கப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் இதன் மூலம் வருவாய் ரூ.16,09,890/– கிடைக்கப் பெற்றது. கடந்த ஆண்டு வருவாய் ரூ.23,42,230/– ஆகும்.

## 25. <u>குடிநீர் விநியோகம்</u>

### 25–1 <u>குடிநீர் பிரிவு பணியாளர்கள்:</u>

நகராட்சி பொறியாளரின் மேற்பார்வையில் குடிநீர் விநியோகப் பிரிவில் கீழ்க்கண்ட பணியிடங்கள் உள்ளன.

| வ.எண். | பதவி | எண்ணிக்கை | |
|---|---|---|---|
| 1 | மின்பணியாளர் நிலை 2 | 2 | காலியிடம் (2) |
| 2 | குடிநீர் பிரிவு சிற்றெழுத்தர் | 1 | |
| 3 | குழாய் பொறுத்துநர் | 5 | காலியிடம் (3) |
| 4 | மீட்டர் ரீடர் | 1 | |
| 5 | குழாய் ஆய்வாளர் | 1 | காலியிடம் |
| 6 | குழாய் சுத்திகரிப்பாளர் | 2 | |
| 7 | குழாய் திறப்பாளர் | 3 | |
| 8 | குடிநீர் விநியோக பணி உதவியாளர் | 1 | காலியிடம் |
| 9 | தலைமை நீர்த்தேக்க காவலர் | 1 | |
| 10 | குடிநீர் விநியோகம் இருப்பு பொருட்கள் அறை காவலர் | 1 | |
| 11 | வடிகட்டிப் படுகை இயக்குபவர் | 1 | காலியிடம் |
| 12 | குடிநீர் விநியோகம் லாரி ஓட்டுநர் | 1 | |
| 13 | பம்ப் ஹவுஸ் காவலர் | 1 | |
| | மொத்தம் | 21 | |

### 25- II. <u>குடிநீர் வழங்கல்</u>

இந்நகருக்காக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் 1914 ஆம் ஆண்டிலிருந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. நகரின் மையப் பகுதியிலிருந்து சுமார் 4 கி.மீ தொலைவில் அமைந்துள்ள பாம்பார் நதியில் இரண்டு அணைகள் உள்ளது. அவற்றின் மொத்த கொள்ளளவு 14.28 மெகா லிட்டர் ஆகும். இவ்விரண்டில் மண் அணை 21 அடி ஆழமும், புதிய கல் கட்டிட அணை 36 அடி உயரமும் கொண்டது. இவ்விரண்டு அணைகளிலும் மழை நீரை சேகரம் செய்து கொடைக்கானல் நகர் பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

நகரின் குடிநீர்த் தேவைகளுக்கு ஏற்ப பியர்சோலா நீர்வீழ்ச்சியிலும் பேரிபால்ஸ் நீர்வீழ்ச்சிகளும் செக் டேம் அமைத்து அதன் மூலம் தினமும் சுமார் 2.00 லட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், குடிநீர் குழாய் இல்லாத பகுதிகளுக்கும் வறட்சி காலங்களில் குடிநீர்த் தேவைகளை சமாளிக்கவும் நகராட்சி பகுதிகளில் 37 ஆழ் துளை கிணறுகள் அமைக்கபட்டுள்ளது. மேலும், ஜிம்கானா பகுதியில் உள்ள ஒரு கிணற்றின் குடிநீருக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. லாரி டாங்கர்களில் ஆயில் எஞ்சின் மூலமாக குடிநீர் விநியோகம் செய்ய நீர் ஆதாரம் உள்ள இடங்களில் ஜிம்கானா கிரவுண்டில் மூன்றும், பாம்பார்புரம், நேதாஜி நகர் மற்றும் பன்பலை வானொலி நிலையம் அருகில் முறையே ஒவ்வொன்றுமாக 6 திறந்த வெளி கிணறுகள் தோண்டப் பெற்று அதில் இரண்டு மின் மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

நகரின் அனைத்துப் பகுதிகளுக்கு இயற்கையான புவி ஈர்ப்பு விசையின் மூலமாக (Gravity flow) 9" இன்ச் விட்டமுள்ள குழாயிலிருந்து 2" இன்ச் விட்டமுள்ள குழாய் மூலம் சுமார் 65 கி.மீ தூரத்திற்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேடான பகுதிகளான அப்சர்வேட்டரி, புதுக்காடு மற்றும் பில்டிங் சொசைட்டி பகுதிகளுக்கு மின் மோட்டார் பம்புகளில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகர் பகுதிகளில் வசித்து வரும் மக்கள் 36463 ஆகும். மேலும் இது ஒரு கோடை வாசஸ்தலம் சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருவதாலும் எதிர் காலத் தேவைகளை கருத்தில் கொண்டு குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள் தொடங்கப்பட்டன. தமிழக அரசு பாம்பார் ஆற்றின் மேல் படுக்கையில் (Masonary Dam) ரூ. 215.00 லட்சத்திற்கு ஒரு அணை கட்டவும், ரூ. 60.93 லட்சம் செலவில் ஒரு சுத்திகரிப்பு நிலையம் கட்டவும் அரசு ஆணை (பல்வகை) எண். 6 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள். 5–1–1993 ல் அனுமதி வழங்கப்பட்டது.

அதன் அடிப்படையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்றன. சுத்திகரிப்பு நிலையம் 2.6 M.L.D. சுத்திகரிப்பு திறனுடன் செயல்பட்டு வந்தது. தற்பொழுது நகரின் குடிநீர் தேவை சுமார் 3.28 M.L.D ஆக அதிகரித்துவிட்டதால் சுத்திகரிப்பு நிலையம் மீண்டும் சரி செய்து உபயோகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நகரின் அனைத்துப் பகுதிகளுக்கும் குடிநீர் ஒரு நபருக்கு 90 லிட்டர் வீதம் மூன்று நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குடிநீர் நிர்ணய விதிகளின்படி நபர் ஒருவருக்கு தினசரி 135 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கும் பொருட்டு திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. இதற்காக நகரின் கீழ்க்கண்ட பகுதிகளில் கீழ் நிலைத் தொட்டிகள் அமைத்து தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

| | தரை மட்டத் தொட்டிகள் | கொள்ளளவுகள் (லிட்டர்) |
|---|---|---|
| 1 | செல்லபுரம் | 1.00 லட்சம் |
| 2 | லிவின்ச் ரோடு | 4.50 லட்சம் |
| 3 | அண்ணாசாலை | 1.50 லட்சம். |
| 4 | நாயுடுபுரம் | 3.50 லட்சம். |
| 5 | அப்சர்வேட்டரி | 0.20 லட்சம். |
| 6 | இந்திரா நகர் | 0.75 லட்சம். |
| 7 | சீனிவாசபுரம் | 0.75 லட்சம். |
| 8 | செல்லபுரம் | 2.00 லட்சம். |
| 9 | மூஞ்சிக்கல் | 2.00 லட்சம் |
| 10 | உகார்த்தே நகர் | 0.30 லட்சம். |

## 25- III. தலைமை நீர்த்தேக்கம்:

பாம்பார் ஆறு : 2
அமைந்துள்ள இடம் : கொடைக்கானல் மலைப் பகுதி.

1. அடி குழாய் மூலம் சப்ளை : 37 எண்ணம்.
2. ஆழ்குழாய்களில் மின் மோட்டார் : 37

**<u>பொதுக் குழாய்கள்</u>**

பொதுக் குழாய்களின் எண்ணிக்கை : 423
பொதுக் குழாய் மூலம் விநியோகம் : 2.5 லட்சம் லிட்டர்
குடிநீர் குழாய் வீட்டு இணைப்புகள் : 4760

## வீட்டுக் குடிநீர் குழாய் இணைப்புகளின் எண்ணிக்கை

| இணைப்பின் தன்மை | இணைப்புகளின் எண்ணிக்கை | | | விநியோகம் செய்யும் நீரின் அளவு |
|---|---|---|---|---|
| | மீட்டர் | பிளாட் | மொத்தம் | |
| வீட்டு உபயோகம் | 4278 | இல்லை | 4278 | நாள் ஒன்றுக்கு 90 எல்.பி.சி.டி. |
| வணிக உபயோகம் | 482 | இல்லை | 482 | |
| தொழிற்சாலை உபயோகம் | இல்லை | இல்லை | இல்லை | |

குடிநீர் கட்டணம் 1000 லிட்டருக்கு கீழ்க்கண்டவாறு வசூலிக்கப்படுகிறது.

1. ரூ. 140 வீதம் வீட்டு உபயோகத்திற்கு.
2. ரூ. 480/– வீதம் (வியாபார நிமித்தம் மற்றும் தொழிற் சாலை பயன்பாட்டிற்கு)

மேலும், இவ்விணைப்புகளுக்கு கீழ்க்கண்டவாறு வைப்புத் தொகை வசூலிக்கப்படுகிறது.

1. வீட்டுக் குடிநீர் குழாய் இணைப்பிற்கு. ரூ. 12000/–
2. தொழிற்சாலை குழாய், வியாபார குழாய். ரூ. 15000/–

## 26. நகரமைப்பு பிரிவு

| வ.எண். | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நகரமைப்பு அலுவலர் | 1 |
| 2 | நகரமைப்பு ஆய்வர் | 1 |
| 3 | சங்கிலியாள் | 2 |

### 26.1 நில அபிவிருத்தி நகரமைப்பு:

நகராட்சி புதிய விரிவாக்க நகரளவுத் திட்டம் நிலஅளவுத் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு முடிவு பெற்றுள்ளது. புதிய நில அளவை ஆவணங்களும் வரை படங்களும் நகராட்சி அலுவலகத்திற்கு நில அளவை உதவி இயக்குநர் அவர்களால் வழங்கப்படவில்லை. இந்நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட 2 நகரமைப்புத் திட்டங்களின் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1. பிரஞ்சு லேண்ட் நகரமைப்புத் திட்டம் ( அங்கீகரிக்கப்பட்ட நகரமைப்புத் திட்டம்).
2. ஆனந்தகிரி மேற்கு நகரமைப்புத் திட்டம்.

### அங்கீகரிக்கப்பட்ட நகரமைப்புத் திட்டங்கள்

பிரஞ்சுலேண்டு நகரமைப்புத் திட்டம் இத்திட்டம் 12.10.1940ம் தேதிய 4793ம் எண் பொது நலத்துறை அரசாணையில் அங்கீகரிக்கப்பட்டது. நிலஅளவு எண்.393ல் உள்ள நிலத்தில் 10 ஏக்கர் பரப்பு கொண்டது நகரமைப்பு தொழில்நுட்பவல்லுநர் 1994ம் ஆண்டு இதைப் பார்வையிட்டு சில மாறுதல்கள் செய்ய தெரிவித்தார். அதையடுத்து 2.5.76 தேதி 429ம் எண் உள்ளாட்சித்துறை அரசாணையில் வரைவு மாறுதல் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் இருந்து வருகிறது.

**ஆனந்தகிரி மேற்கு நகரமைப்புத் திட்டம்**

இத்திட்டம் 16.12.1960 ம் தேதிய 2472 ம் எண் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அரசாணைப்படி அங்கீகரிக்கப்பட்டது. இத்திட்டத்தில் 18.55 ஏக்கர் நிலம் அடங்கியுள்ளது. மேற்கண்ட இரண்டு அங்கீகரிக்கப்பட்ட நகரமைப்புத் திட்டங்களையும் நிறைவேற்ற தேவையான நடவடிக்கைகள் 1971ம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புத் திட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன.

விரிவு அபிவிருத்தி திட்ட விதி 8 XII படி வளர்ச்சி கட்டுப்பாடு விதிகள் (DCR) அரசால் ஒப்புதல் வழங்கி, அறிவிப்பு செய்து இணைக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட முழுமைத் திட்டங்களுக்கான உள்ளூர் திட்டப் பகுதிகளில் அமைந்துள்ள விரிவு அபிவிருத்தித் திட்டங்களுக்கு திட்ட விதிகள் பொருந்தாது. முழுமைத் திட்ட வளர்ச்சி கட்டுப்பாடு விதிகள் மட்டுமே பொருந்தும் எனவே கீழ்க்கண்ட வரைவு நிலை விரிவு அபிவிருத்தி திட்டங்கள் கைவிடப்பட்டது.

1. கொடைக்கானல் ஏரி வடக்கு நகரமைப்புத் திட்டம்
2. கொடைக்கானல் ஏரி கிழக்கு நகரமைப்புத் திட்டம்
3. கொடைக்கானல் ஏரி மேற்கு நகரமைப்புத் திட்டம்
4. கொடைக்கானல் ஏரி தெற்கு நகரமைப்புத் திட்டம்
5. பாம்பார்புரம் நகரமைப்புத் திட்டம்
6. பிளிஸ்வில்லா நகரமைப்புத் திட்டம்
7. சீனிவாசபுரம் நகரமைப்புத் திட்டம்
8. உட்காட் நகரமைப்புத் திட்டம்
9. நாயுடுபுரம் நகரமைப்புத் திட்டம்
10. கடைவீதி அபிவிருத்தி நகரமைப்புத் திட்டம் வரைவு நிலையில் உள்ள நகரமைப்புத் திட்டம்.

**26–2. முழுமைத்திட்டம்**

நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 10(1) ன் கீழ் அரசு ஆணை எண்.2043 (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை) நாள் 20.9.73 மூலம் கொடைக்கானல் உள்ளூர் திட்டப் பகுதியாக பிரகடனம் செய்யப்பட்டது. அரசு ஆணை எண். 685 (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை) நாள் 16.3.74 மூலம் நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 10(1) ன் கீழ் மேற்படி பிரகடனம் செய்யப்பட்ட உள்ளூர் திட்டப் பகுதி உறுதி செய்யப்பட்டது. கொடைக்கானல் முழுமைத்திட்டம் நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 21(2) ன் கீழ் அரசு ஆணை எண். 571 (வீட்டு வசதி மற்றும் நகர்புற அபிவிருத்தி துறை) நாள் 11.5.88ன் மூலம் மேற்படி கொடைக்கானல் முழுமைத் திட்டத்திற்கு இணக்கம் அளிக்கப்பட்டது. இணக்கம் அளிக்கப்பட்ட முழுமைத் திட்டத்தின் மீது 31.8.88 முதல் 31.10.88 முடிய உள்ள காலத்தில் பொது மக்களிடமிருந்து ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் கோரப்பட்டது. அவ்வாறு பெறப்பட்ட ஆட்சேபனைகள் மற்றும் கருத்துருக்களின் மீது நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் பரிந்துரைகள் பெறப்பட்டு திருத்திய முழுமைத் திட்டம் உள்ளூர் திட்டக்குழு தீர்மானம் எண்.6, நாள் 6.2.91 ன் படி நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 28 ன் கீழ் அரசின் இறுதி ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டு அரசு ஆணை எண். 170 வீட்டு வசதி மற்றும் நகர்புற அபிவிருத்தி துறை நாள் 4.3.93ன் மூலம் முழுமைத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டு முழுமைத்திட்ட விதிகள் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

கொடைக்கானல் முழுமைத் திட்டம் அமுலுக்கு வந்து ஐந்து ஆண்டுகள் சென்று விட்டதால் அம்முழுமைத் திட்டத்தை தற்போது மறு ஆய்வு செய்வதற்கு வல்லுநர் குழு நியமனம் செய்து அரசாணை (நிலை) எண்.339 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 11.05.1999 மூலம் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும், அரசாணை நிலை எண்.199, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வருவாய் துறை, நாள்.15.09.2010–ன்படி வல்லுநர் குழு உறுப்பினர்களை மாற்றி அமைத்து உத்தரவிடப்பட்டுள்ளது. தற்போது மறு ஆய்வு முழுமைத் திட்டம் அரசின் ஒப்புதல் பெற, நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை அலுவலகம் மூலமும் மறு ஆய்வு குழுவின் மூலமும் மறு ஆய்வு முழுமைத் திட்டம் தயாரிக்கும் பணிகள் முடிக்கப்பட்டு அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 26.3 அளவு கடப்புகள்

அளவுக் கடப்புகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | 01.04.2016ல் நிலுவையில் இருந்த அளவு கடப்புகள் | 690 |
| 2 | அறிக்கையாண்டில் கண்டு பிடிக்கப்பட்ட அளவு கடப்புகள் | 11 |
| 3 | மொத்தம் | 701 |
| 4 | இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்டவை | |
| | 1. அனுமதி கூராங்கப்பட்டவை | இல்லை |
| | 2. குத்தகைக்கு விடப்பட்டவை | இல்லை |
| | 3. நில ஒதக்கீடு செய்யப்பட்டவை | இல்லை |
| 5 | குரத்திற் கொள்ளப்பட்டவை | இல்லை |
| 6 | அகற்றப்பட்டவை | 696 |
| 7 | நிலுவை | 5 |

### 27. நகரளவைப் பணிகள்:

1908 ஆம் ஆண்டிலிருந்து நகரளவை பணிகள் மேற்கொள்ளப்பட்டு இறுதியாக 1970 மற்றும் 1996 ஆம் ஆண்டுகளில் முழு அளவை செய்யப்பட்டு ஆவணங்கள் பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தனியார் இடங்களை அளவை செய்தல், புலப்பட நகல் வரைபடங்குலூ தயார் செய்து வாங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

**பணியாளர்கள் விபரம்**

| வ. எண். | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நகர சார் ஆய்வாளர் (நில அளவை) | 1 |
| 2 | புல உதவியாளர் | 2 |

### 28. அச்சம் மற்றும் அருவருக்கத் தக்க தொழில்கள்

நகராட்சி எல்லைக்குள் நடத்தப்படும் எல்லா தொழில்களுக்கும் உரிமையாணைக் கட்டணம் வசூலிக்கப்பட்டுத. நகராட்சி துப்புரவு ஆய்வாளர், நகர் நல அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர் ஆகியோர் அனைத்து தொழில் நிலையங்களையும் பார்வையிட்டு குறைபாடுகளை அவ்வப்போது அகற்றி வந்துள்ளனர். ஊரிமையாணைக் கட்டணமாக அறிக்கையாண்டில் ரூ. 20,88,950/– மட்டும் வசூல் செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் இவ்வினத்தில் வருவாய் ரூ. 9,80,400/– ஆக இருந்தது.

**28–1 உணவுக் கலப்படம்.**

உணவு கலப்படத் தடைச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டு, உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டம் ஆணையரகம் மூலம் தனியாக செயல்பட்டு வருகிறது.

**29. பொதுச் சுகாதாரம்:**

**29–1. துப்புரவு:**

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் கீழ்க்கண்டுள்ள பணியாளர்கள் பணியாற்றுகின்றனர்.

| வ. எண் | பதவி | எண்ணிக்கை | |
|---|---|---|---|
| 1 | நகர் நல அலுவலர் | 1 | |
| 2 | பெண் மருத்துவ அலுவலர் | 1 | காலியிடம் |
| 3 | துப்புரவு ஆய்வாளர்கள் | 3 | |
| 4 | துப்புரவு மேற்பார்வையாளர்கள் | 4 | |
| 5 | ஓட்டுநர் | 3 | காலியிடம் (1) |
| 6 | மகப்பேறு உதவியாளர்கள் | 3 | காலியிடம் (3) |
| 7 | மகப்பேறு ஆயா | 3 | காலியிடம் (2) |
| 8 | அலுவலக உதவியாளர் | 1 | |
| 9 | துப்புரவு பணியாளர்கள் | 105 | காலியிடம் (38) |
| 10 | ஒப்பந்த துப்புரவு பணியாளர்கள் | 96 | |

அறிக்கையாண்டில் 67 நிரந்தரம் மற்றும் 96 ஒப்பந்த பொது சுகாதார தொழிலாளர்கள்மூலமாக 3 துப்புரவு ஆய்வர்களின் கீழ் துப்புரவு மேற்பார்வையாளர்கள் 4 பேர் கண்காணிப்பில் நகரில் குப்பைகளை அகற்றியும் தெருக் கால்வாய்கள் சுத்தப் படுத்தியும் நகர்ப்புறத்தை சுத்தகமாக பராமரிக்கப்பட்டு வந்தது. குப்பைகள் கீழ்கண்ட வண்டிகள் மூலமாக அகற்றப்பட்டுள்ளது.

| வ.எண். | வண்டிகளின் வகைகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மினி லாரி | 3 |
| 2 | டம்பர் பிளேசர் லாரி | 2 |

**29–2 சந்தைகளும் திருவிழாக்களும்**

ஆண்டு தோறும் நடைபெறும் உள்ளூர் அருள்மிகு மாரியம்மன் கோவில் திருவிழாவும், புனித சலேத் மாதா திருவிழாவும், பங்குனி உத்திரத்தன்று அருள்மிகு குறிஞ்சி ஆண்டவர் கோவில் காவடி திருவிழாவும் முக்கியமானவைகளாகும். புனித சலேத் மாதா திருவிழா வெளியூர்களிலிருந்து ஏராளமான மக்களை கவர்கின்றுது. இத்திருவிழாவிற்கு கூடும் வெளி மாநிலத்தாரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருக்கிறுத. கோடை மாதங்களான ஏப்ரல்,மே மற்றும் ஜுன் மாதங்களில் இந்நகருக்கு கூடும் சுற்றுலா பயணிகளின் வருகை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டு வருகிறது. மேற்படி திருவிழாக்குளுக்கு நகராட்சியால் சிறப்பான முறையில் சுகாதார வசதிகள் செய்யப்பட்டுள்ளது. விவசாயத் துறையினரால் நடத்தப்படும் உழவர் சந்தை ஒன்றும் நகராட்சி எல்லைக்குள் கோட்டாட்சியர் அலுவலகம் முன்பாக செயல்பட்டு வருகிறது.

**29–3. உரக்கிடங்கு**

இந்நகராட்சியால் பராமரிக்கப்படும் உரக்கிடங்கு அடுக்கம் கிராமத்தில் சீராடுங்கானல் பகுதியில் அமைந்துள்ளது. மேற்படி உரக் கிடங்கு நகராட்சி அலுவலகத்திலிருந்து 12 கி. மீட்டர் தொலைவில் உள்ளது. மேற்படி உரக் கிடங்கு 3.77 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ளது.

**29 –4 ஆடு, அடிக்கும் இடம்**

இந்நகராட்சியால் ஆடு, மாடு வதை சாலை ஏதும் பராமரிக்கப்படவில்லை.

**29 –5. சுடுகாடு, இடுகாடு**

இந்நகராட்சியால் 4 மயானங்கள்பராமரிக்கப்பட்டு வருகிறது. அதில் ஆங்கிலோ இந்தியர்களுக்காக ஒன்றும், இந்துக்கள், கிறிஸ்தவர்கள், மற்றும் இஸ்லாமியர்களுக்கு தலா ஒவ்வொன்றும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**29–6. குப்பை லாரி**

நகரில் சேகரிக்கப்படும் குப்பைகள் மற்றும் கழிவுகள் முதலியவைகள் லாரி மூலம் எடுத்துச் செல்லப்பட்டு அடுக்கம் கிராமம், சீராடுங்கானல் பகுதியில் நகராட்சி உரக்கிடங்கில் சேகரிக்கப்படுகிறது. இவ்வாண்டில் நகராட்சி 48 பொது மலக்கழிப்பிடகளை பராமரித்து வந்தது. இவை அனைத்தும் நீரடிக் கழிப்பிடங்களாகவும் இருந்தன. நகராட்சியால் சொத்துவரி விதிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 11150 ஆகும். இதில் குடியிருப்பு வீடுகளின் எண்ணிக்கை 10030 ஆகும். இதில் கழிப்பறை உள்ள வீடுகளின் எண்ணிக்கை 9619 ஆகும். உர உற்பத்திக்காக இந்நகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட வருட குறியீடு 17 மெட்ரிக் டன் ஆகும்.

**29–7. துப்புரவுப் பணியாளர்குளுக்கு வசதிகள்:**

57 துப்புரவுப் பணியாளர்கள் வாடகையின்றி இலவசமாக குடியிருந்து வருகிறார்கள். மொத்த துப்புரவுப் பணியாளர்களை இரண்டு பிரிவுகளாக பிரித்து புதன் மற்றும் ஞாயிறு ஆகிய நாட்களில் முழு நேரமும் மற்றும் முக்கிய பண்டிகை நாட்களிலும் உள்ளூர் திருவிழா நாட்களிலும் பிற்பகல் அரை நாள் விடுமுறையும் வழங்கப்பட்டுவருகிறது. துப்புரவுப் பணியாளர்களுக்கு வருடந்தோறும் 2 ஜோடி சீருடைகள் இலவசமாக வழங்கப்பட்டுவருகிறது. மேலும், கதர் நிலையத்தில் இருந்தோ அல்லது கைத்தறி விற்பனை நிலையத்திலிருந்தோ கடன்தவணை, முறையில் துணி வாங்குவதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் இந்நகரின் துப்புரவுப் பணியாளர்கள், துப்புரவு மேற்பார்வையாளர்கள் மற்றும் துப்புரவு ஆய்வாளர்கள் அனைவரும் ஒன்றாக கூடி கூட்டுத் துப்புரவுப் பணி ( Mass Cleaning ) வாரத்திற்கு ஒரு நாள் செய்து நகரை தூய்மைப்படுத்தி வருகின்றனர். நகராட்சி துப்புரவுப் பணியாளர்களுக்கு நகராட்சி மூலம் வருடம் தோறும் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கி வழங்கப்பட்டுவருகிறது மற்றும் மருத்துவ பரிசோதனை வசதி செய்யப்பட்டு வருகிறது.

**29– 8. திடக் கழிவு மேலாண்மை**

திடக் கழிவு மேலாண்மை திட்டத்தை நகராட்சி பகுதியில் செயல்படுத்த அரசாணை எண்.131 , நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை , நாள்.21.12.2002 ல் தெரிவித்த அறிவுரையின்படி நகர் மன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டு மேல் நடவடிக்கை ஏடுக்கப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் இந்நகராட்சி பகுதியில் அனைத்து வீடுகளிலிருந்தும் மக்கும் குப்பை, மக்காத குப்பைகள் துப்புரவு பணியாளர்களைக் கொண்டு சேகரித்து லாரிகளில் ஏற்றி உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டும், வீடுகளில் இருந்து குப்பைகளை நேரிடையாகப் பெறப்பட்டு உரக்கிடங்கிற்கு எடுத்துச் செல்லப்பட்டும் வந்தது. உரம் தயாரிக்க உரக்கிடங்கில்பிளாட் பாா்ம் அமைக்கப்பட்டு, windrows அமைக்க நடவடிக்கையில் உள்ளது.

**29–9. பொது சுகாதாரம்/மருத்துவ உதவி**

நகராட்சியால்தற்போது நகர் நல மையம் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும், அரசு மருத்துவமனை ஒன்றும், அமெரிக்க மத நிறுவனத்தால் நடத்தப்படும் வேன் ஆலன் மருத்துவ மனையும், KHMS மருத்துவமனையும், மகப்பேறு விடுதியும் அரசு நடமாடும் மருந்தகமும் இந்நகரில் இயங்கி வருகின்றன. இவை தவிர சீனிவாசபுரத்தில் செவன் டாலர்ஸ் சகோதரிகளால் மருந்தகம் நடத்தப்பட்டு வருகிறது.

**30. பிறப்பு விகிதம் – மகப்பேறுகள்**

பிறப்பு, இறப்புகளை பதிவு செய்ய துப்புரவு ஆய்வாளர் பயிற்சி பெற்ற மூன்று துப்புரவு ஆய்வாளர்கள் அறிக்கை ஆண்டிலும் தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்கள். அறிக்கையாண்டில் 432 பிறப்புகள் பதிவு செய்யப்பட்டன. பிறப்பு விகிதம் மக்கள் தொகையில் ஆயிரத்திற்கு 7.9 ஆகும். சென்ற ஆண்டில் 289 பிறப்புகள் பதிவு செய்யப்பட்டன. கடந்த ஆண்டு பிறப்பு விகிதம் மக்கள் தொகையில் ஆயிரத்திற்கு 11.2 ஆகும். நகராட்சியில் ஒரு பெண் மருத்துவ அதிகாரி பணியிடம் காலியாக உள்ளது. மேலும், மூன்று மகப்பேறு உதவியாளர் மற்றும் இரண்டு மகப்பேறு ஆயா பணியிடமும் காலியாக உள்ளது.

பெண் மருத்துவ அலுவலர் பணியிடம் 20.11.97 முதல் காலியாக உள்ளது. அரசினர் மருத்துவ மனையிலும் தனியார் மருத்துவ மனைகளிலும் மகப்பேறுகளை கவனிக்க மகப்பேறு உதவியாளர்கள் உள்ளனர். சேய்கள் இறந்து பிறந்தது இல்லை. சேய்கள் பிறந்து இறந்தது இல்லை. குடும்ப நலத்திட்ட நிலையங்கள் ஏதும் இந்நகராட்சியால் பராமரிக்கப்படவில்லை.

**31. இறப்பு விகிதம்**

அறிக்கையாண்டில் ஏற்பட்ட இறப்புகள் 285 ஆகும். கடந்த ஆண்டு ஏற்பட்ட இறப்புகள் 249 ஆகும். கீழ்க்கண்ட நோய்களால் கடந்த மூன்று ஆண்டுகளில் ஏற்பட்ட இறப்புகள் பின்வருமாறு உள்ளன.

| வ.எண். | நோய்கள் | 2016–2017 | 2017–2018 | 2018–2019 |
|---|---|---|---|---|
| 1 | காய்ச்சல். | | | |
| 2 | வயிற்றுப்போக்கு | | | |
| 3 | ஈரல் மற்றும் சுவாசக் குழல் நோய்கள். | 50 | 54 | 62 |
| 4 | காலரா (வாந்திபேதி) | | | |
| 5 | பெரியம்மை | | | |
| 6 | பெருவாரி நோய் ( பிளேக்) | | | |
| 7 | மூளைக் காய்ச்சல் | | | |
| 8 | இதர நோய்கள் | 125 | 195 | 223 |
| | மொத்தம் | 175 | 249 | 285 |

## 33. SJSRY Scheme 2016-2017

சுவர்ண ஜெயந்தி நகர்புறம் வேலை வாய்ப்புத் திட்டத்தில் 2016–17ம் ஆண்டிற்கு மத்திய மற்றும் மாநில அரசு நிதி இவ்வறிக்கையாண்டில் பெறப்படவில்லை.

## 34 . பள்ளிகள்

1–4–1990 முதல் அரசிடம் ஒப்படைக்கப்பட்டு நகராட்சிப் பள்ளிகள் உதவிக் கல்வி அலுவலர் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகராட்சியால் உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் ஏதும் நடத்தப்படவில்லை. கீழ்க்காணும் விபரத்திற்கு பள்ளிகள் இந்நகராட்சி எல்லைக்குள் நடத்தப்பட்டு வருகிறது.

| வ. எண் | பள்ளியின் பெயர் | வ. எண் | பள்ளியின் பெயர் |
|---|---|---|---|
| 1 | நகராட்சி துவக்கப் பள்ளி | 13 | புனித சேவியர் மேல்நிலைப் பள்ளி |
| 2 | நகராட்சி துவக்கப் பள்ளி | 14 | புனித ஜான் பெண்குலூ மேல்நிலைப் பள்ளி |
| 3 | நகராட்சி துவக்கப் பள்ளி | 15 | ஆர்.சி.மேல்நிலைப் பள்ளி |
| 4 | புனித ஜோசப் துவக்கப்பள்ளி | 16 | சீயோன் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி |
| 5 | குழந்தை ஏசு துவக்கப்பள்ளி | 17 | கொடைக்கானல் கிறிஸ்துவ மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி |
| 6 | ஆர்.சி.தொடக்கப்பள்ளி | 18 | கொடைக்கானல் பப்ளிக் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி |
| 7 | சி.எஸ்.ஐ. நடுநிலைப் பள்ளி | 19 | ஸ்ரீ சங்கரா வித்யாலயா மெட்ரிகுலேசன் மேல் நிலைப் பள்ளி |
| 8 | புனித தெரசா நடுநிலைப் பள்ளி | 20 | புனித பீட்டர்ஸ் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி |
| 9 | பிரசன்டேசன் கான்வென்ட் | 21 | பவன்ஸ் காந்தி வித்யாசரம் |
| 10 | சி.எஸ்.ஐ.பள்ளி | 22 | புனித தாமஸ் மெட்ரிகுலேசன் பள்ளி |
| 11 | அரசு மேல்நிலைப் பள்ளி | 23 | புனித சாந்தோம் பப்ளிக் பள்ளி |
| 12 | புனித சேவியர் மேல்நிலைப் பள்ளி | | |

### 34.1 பல்கலைக் கழகம்

பல்கலைக் கழகம் ஏதும் கொடைக்கானல் நகராட்சி எல்கையில் இல்லை.

### 34–2. கல்லூரிகள்

(1) கொடைக்கானல் கிறிஸ்தவ கல்லூரி.

(2) அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழக கல்லூரி கல்வியியல் துறை.

### சிறப்புப் பள்ளி.

கொடைக்கானல் அனைத்து உலகப் பள்ளி (அமெரிக்க ஐக்கிய நாடுகள் உதவி நிறுவனங்களால் நடத்தப்படும் அனைத்து உலகப்பள்ளி). (Kodaikanal International Public School) கொடைக்கானல் நகராட்சி எல்கையில் உள்ளது.

## 35. வானொலி நிலையம்

கொடைக்கானலில் பண்பலை வானொலி நிலையம் செயல்பட்டு வருகிறது.

## 36. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மைய அலுவலகம்.

தமிழ்நாடு அரசு கல்வி சத்துணவுத் திட்டத்தின் கீழ் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் கொடைக்கானல் நகராட்சியில், 3 துவக்கப் பள்ளிகளில் செயல்பட்டு வருகிறது.

| வ. எண் | வார்டு எண் | மையத்தின் பெயர் | 2018–2019 ஆம் ஆண்டில் உணவு உண்ணும் பயனாளிகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | ஆண் | பெண் | மொத்தம் |
| 1 | 16 | ஆனந்தகிரி துவக்கப் பள்ளி. | 35 | 25 | 60 |
| 2 | 18 | அப்சர்வேட்டரி துவக்கப் பள்ளி | 17 | 13 | 30 |
| 3 | 7 | சீனிவாசபுரம் துவக்கப் பள்ளி. | 8 | 7 | 15 |
| | | மொத்தம் | 60 | 45 | 105 |

**உணவருந்தும் குழந்தைகளின் எண்ணிக்கை**

பள்ளி நாட்களில் – 105
விடுமுறை நாட்களில் – இல்லை.

**பணியாளர்கள்**

| வ. எண் | பதவி | எண்ணிக்கை | |
|---|---|---|---|
| 1 | அமைப்பாளர்கள் | 3 | காலியிடம் 2 |
| 2 | சமையலர்கள் | 3 | காலியிடம் 1 |
| 3 | சமையல் உதவியாளர் | 3 | காலியிடம் 2 |

மேலும், சத்துணவு உண்ணும் மாணவ, மாணவியர்கள் அனைவருக்கும் முட்டையுடன் கூடிய சத்துணவும், செவ்வாய் கிழமை கொண்டை கடலை அல்லது பாசிப்பயறு , வெள்ளிக் கிழமை உருளைக் கிழங்கு வழங்கப்பட்டு வருகிறது. 15.07.2009 முதல் அரசு உத்திரவின்படி வாரம் 5 முட்டைகள் வழங்கப்பட்டு வருகிறது. பண்டிகை நாட்களில் இனிப்பு பொங்கல், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு சிறப்பு உணவு தயாரித்து உணவுடன் சேர்த்து வழங்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சியால் பள்ளி சத்துணவு மையங்கள் நன்கு பராமரிக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

## 37. பொது மற்றும் வருவாய்கள்

### பொது பிரிவு

| வ. எண் | பதவி | எண்ணிக்கை | |
|---|---|---|---|
| 1 | மேலாளர் | 1 | |
| 2 | கணக்கர் | 1 | |
| 3 | உதவியாளர் | 1 | |
| 4 | வருவாய் ஆய்வர் | 1 | |
| 5 | இளநிலை உதவியாளர் | 10 | காலியிடம் (1) |
| 6 | வருவாய் உதவியாளர் | 3 | |
| 7 | தட்டச்சர் | 1 | |
| 8 | பதிவறை எழுத்தர் | 1 | |
| 9 | ஓட்டுநர் | 1 | |
| 10 | சமுதாய அமைப்பாளர் | 2 | |
| 11 | அலுவலக உதவியாளர் | 6 | காலியிடம் (3) |
| 12 | சமையலர் உடன் காவலர் | 1 | |
| 13 | மார்க்கெட் வசூல் அலுவலக உதவியாளர் | 1 | காலியிடம் |
| 14 | புதிய தங்கும் விடுதி காவலர் | 1 | |
| 15 | இரவு காவலர் | 1 | காலியிடம் |

**<u>கணினி பிரிவு</u>**

| வ. எண் | பதவி | எண்ணிக்கை | |
|---|---|---|---|
| 1 | உதவி திட்ட அமைப்பாளர் | 1 | |
| 2 | புள்ளி விபரக் குறிப்பாளர் | 1 | காலியிடம் |

## 38. சொத்துவரி

**<u>கேட்பு,வசூல், நிலுவை</u>**

கடந்த மூன்று ஆண்டுகளுக்கான வரியினங்கள் மற்றும் வரியில்லா இனங்களின் கீழ் நிலுவை மற்றும் நடப்பு கேட்பு,வசூல், நிலுவை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| சொத்துவரி (நிலுவை) | | | | |
|---|---|---|---|---|
| ஆண்டு | கேட்பு | வசூல் | நிலுவை | வசூல் விழுக்காடு |
| 2016–2017 | 32581000 | 4160000 | 28421000 | 12.77% |
| 2017–2018 | 80087556 | 35452068 | 44635488 | 44.2% |
| 2018–2019 | 141138354 | 36994104 | 104144250 | 26.21% |
| சொத்துவரி நடப்பு | | | | |
| 2016–2017 | 36801000 | 30438000 | 6363000 | 82.71% |
| 2017–2018 | 44066000 | 31913000 | 12153000 | 42.27% |
| 2018–2019 | 82871000 | 30114000 | 52757000 | 26.21% |
| தொழில்வரி (நிலுவை) | | | | |
| 2016–2017 | 1672000 | 453000 | 1219000 | 27.09% |
| 2017–2018 | 2278000 | 667000 | 1612000 | 29.26% |
| 2018–2019 | 2465000 | 481000 | 1984000 | 19.52% |
| தொழில்வரி (நடப்பு) | | | | |
| 2016–2017 | 3905000 | 3351000 | 554000 | 85.81% |
| 2017–2018 | 4832000 | 4189000 | 643000 | 68.29% |
| 2018–2019 | 4761000 | 4024000 | 738000 | 84.51% |
| வரியில்லா இனங்கள் (நிலுவை) | | | | |
| 2016–2017 | 15876000 | 2430000 | 13446000 | 15.31% |
| 2017–2018 | 21762000 | 3334000 | 18428000 | 15.32% |
| 2018–2019 | 40375000 | 10617000 | 29758000 | 26.30% |
| வரியில்லா இனங்கள் (நடப்பு) | | | | |
| 2016–2017 | 20925000 | 17193000 | 3726000 | 82.17% |
| 2017–2018 | 29676000 | 14368000 | 15308000 | 48.42% |
| 2018–2019 | 31649000 | 23951000 | 7698000 | 75.68% |

தொழில் வரியின் பேரில் கல்வி வரி விதிக்கப்படவில்லை. மக்கள் தொகையில் மொத்த சொத்துவரி இனங்கள் வருவாய் அறிக்கை ஆண்டில் நபர் ஒன்றுக்கு விதிக்கப்பட்ட வரிவிகிதம் ரூ.920/– ஆகவும் கடந்த ஆண்டில் ரூ. 893/– ஆகவும் இருந்தது. மொத்த சொத்துக்களின் அடிப்படையில் சொத்து ஒன்றுக்கு விதிக்கப்பட்ட சொத்துவரி சதவிகிதம் அறிக்கையாண்டில் 34.13 % ஆகவும் கடந்த ஆண்டு 33.85 % ஆகவும் இருந்தது. அரசினரிடம் இருந்து பெறப்பட்ட மானியங்களை சேர்க்காமல் மொத்த வருவாய் சதவிகிதம் மக்கள் தொகையில் நபர் ஒருவருக்கு அறிக்கையாண்டில் ரூ.3465/– ஆகவும், கடந்த ஆண்டு ரூ. 2741/– ஆகவும் இருந்தது. அரசிடமிருந்து பெறப்பட்ட மானியங்களையும் சேர்த்து மொத்த வருவாய் விகிதம் மக்கள் தொகையில் நபர் ஒருவருக்கு அறிக்கை ஆண்டில் ரூ. 4439/– ஆகவும் கடந்த ஆண்டில் ரூ. 3841/– ஆகவும் இருந்தது.

## 39. வரவு செலவு

அறிக்கையாண்டில் சாதாரணத் தலைப்பின்கீழ் பொது நிதி, விளக்கு நிதி, ஆரம்பக்கல்வி நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் நகரமைப்பு கணக்கு நிதிகளின் மொத்த வரவு செலவு கீழ்கண்ட விகிதத்தில் இருந்தது.

அறிக்கையாண்டில் வருவாய் நிதியின் கீழ் வரவு ரூ.22,97,39,622/– ஆகவும். செலவு ரூ.18,07,34,264/– ஆகவும் உள்ளது. கடந்த ஆண்டில் வருவாய் நிதியின் கீழ் வரவு ரூ. 10,09,38,617/– ஆகவும், செலவு ரூ. 6,76,24,926/– ஆகவும் இருந்தது.

வரவு

| தலைப்புகள் | தொகை ( ரூபாயில்). | |
|---|---|---|
| 1. சொத்துவரி | : | 35894566 |
| 2. இதர வரியினங்கள் | : | 43538141 |
| 3. இதர துறை | : | 758140 |
| 4. மாநில நிதிக்குழு | : | 57085139 |
| 5. சேவை கட்டணம் | : | 13185326 |
| 6. மானியம் மற்றும் பங்குத் தொகை | : | 37198174 |
| 7. வாடகை மூலம் | : | 35266123 |
| 8. இதர வருவாய் | : | 6814013 |
| மொத்தம் | | 229739622 |

<u>செலவு</u>

| தலைப்புகள் | தொகை ( ரூபாயில்). | |
|---|---|---|
| 1. ஊதியம் | : | 76208834 |
| 2. ஓய்வூதியம் | : | 26805421 |
| 3. செயல்பாட்டு செலவினங்கள் | : | 33420191 |
| 4. பழுதுகள் மற்றும் பராமரிப்பு | : | 10453767 |
| 5. நிர்வாக செலவினங்கள் | : | 8653535 |
| 6. திட்ட செலவு (programme Expenses) | : | 120000 |
| 7. இதர செலவினம் | : | 16608941 |
| 8. தேய்மானம். | : | 8463575 |
| மொத்தம் | : | 180734264 |

## 40. சொத்துக்களும் மற்றும் பொறுப்புகளும்

நகராட்சி சொத்துக்களின் மதிப்பு ரூ. 84943353/– ஆகவும் பொறுப்புகள் ரூ.71,03,067/–_ஆகவும் இருந்தது.

## 41. 31.3.2019– ல் கடன்கள் நிலுவை விபரம்

இந்நகராட்சியால் சாலைகள் மற்றும் இதர அபிவிருத்தி பணிகளுக்காக பெறப்பட்ட கடன்களில் அறிக்கையாண்டின் இறுதியில் நிலுவையாக உள்ள தொகைகளின் விபரம் பின்வருமாறு.

| | | தொகை ( ரூபாயில்). | |
|---|---|---|---|
| 1 | (WS) பாதிக்கடன், பாதி மான்யம் – TUFIDCO | : | 69730000 |
| 2 | ஐ.டி.எஸ்.எம்.டி. | : | 0 |
| 3 | TNUDP-II – Special Road Works. | : | 0 |
| 4 | TUFIDCO - சாலை மேம்பாட்டுத் திட்டம். | : | 0 |
| | மொத்தம் | : | 69730000 |

அறிக்கையாண்டில் அரசிடமிருந்து எவ்வித கடன்களும் பெறப்படவில்லை.

## குடிநீர் கட்டண வசூல் விபரம்

| வருடம் | கேட்பு | வசூல் | நிலுவை | வசூல் சதவிகிதம் |
|---|---|---|---|---|
| நிலுவை | | | | |
| 2016–2017 | 810000 | 420000 | 390000 | 51.84% |
| 2017–2018 | | | | |
| 2018–2019 | | | | |
| நடப்பு | | | | |
| 2016–2017 | 3009000 | 3045000 | 383000 | 87.27% |
| 2017–2018 | | | | |
| 2018–2019 | | | | |

## 42. நுழைவு கட்டணம்.

15.06.2010 ம் தேதிய அரசாணை எண். 78, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறுதுறை முகங்கள் (எச்எஸ்1) உத்திரவின்படி கொடைக்கானலில் சுங்கச்சாவடி வசூல் அறிக்கை ஆண்டில் முன்னாள் படைவீரர் கழக டெக்ஸ்கோ பணியாளர்களைக் கொண்டு நகராட்சி அலுவலகம் மூலம் வசூல் செய்யப்பட்டது. அறிக்கையாண்டில் சுங்க வசூல் ரூ. 12176460/– வசூல் செய்யப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டது. கடந்த ஆண்டில் இவ்வினத்தில் வசூல் ரூ. 1,02,33,980/– ஆக இருந்தது. அறிக்கை ஆண்டில் சுங்க நிதியிலிருந்து சாலை மேம்பாட்டு பணிகளுக்கு ரூ. 13051686/– மற்றும் சுங்கச் சாவடி பணியாளர் ஊதியம் ரூ. 1319520/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### வசூல் செய்யப்படும் இடங்கள்

**வத்தலக்குண்டு–கொடைக்கானல் சாலையில் வெள்ளி நீர்வீழ்ச்சி அருகில்.**

### வசூலிக்கப்பட்ட கட்டண விவரங்கள்.

| வ. எண் | வாகனங்கள் | கட்டணம் நாள் ஒன்றுக்கு |
|---|---|---|
| 1 | சுற்றுலா பேருந்து | ரூ. 200/– |
| 2 | பஸ் | ரூ. 100/– |
| 3 | லாரி | ரூ. 80/– |
| 4 | டாக்சி | ரூ. 50/– |
| 5 | கார் (அ) ஜீப் | ரூ. 50/– |
| 6 | வேன் | ரூ. 70/– |

## 43. கொடைக்கானல் ஏரி.

கொடைக்கானல் ஏரியின் முழுக் கட்டுப்பாடும் 1951ம் ஆண்டு முதல் மீன்வளத் துறையின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 125 (1)ன்படி நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து நீர் நிலைகளும் நகர்மன்றத்திற்கு பாத்தியப்பட்டது என்பதால் , அரச ஆணை எண் 105, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 26.06.2009–ன் மூலம், கொடைக்கானல் ஏரியின் முழு கட்டுப்பாடும் ( மீன் பிடி மற்றம் மீன் வளர்ப்பு தவிர ) மீன்வள துறையியிடம் இருந்து கொடைக்கானல் நகராட்சிக்கு மாற்றம் செய்து உத்திரவிடப்பட்டது. கொடைக்கானல் ஏரி 05.08.2009 ல் இருந்து நகராட்சியின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 44. பொது:

நகர் மன்றத் தலைவர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் அவர்கள் வழங்கிய அறிவுரைகளின்படி, நகர் மன்ற உறுப்பினர்கள் ஒத்துழைப்புடன், நகராட்சி அலுவலர்கள் மற்றும் அனைத்துப் பணியாளர்கள் சிறந்த முறையில் பணியாற்றி 2018–2019 ஆம் ஆண்டில் நிர்வாகம் நல்ல முறையில் நடைபெற்றது. அறிக்கையாண்டில் நிர்வாகம் திறம்பட நல்ல முறையில் நடைபெற ஒத்துழைப்பு நல்கிய அலுவலக அனைத்துப் பிரிவுத் தலைவர்கள், அனைத்து பிரிவு பணியாளர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.